ராமநதியின் குறுக்கே தாம்போதி பாலம்.

*வினா எண் 676— திரு. சு. முத்துசாமி கரையாளர், திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலூக்கா, கடையம் ஊராட்சி ஒன்றிய பகுதி ரவணசமுத்திரத்தையும் கோவிந்தபேரியையும் இணைக்கும் வகையில் ராம நதியில் தாம்போதி பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) பாலம் அமைக்கும் பணி ரூ. 4.50 இலட்சம் மதிப்பீட்டில் 1979-80 ஆண்டிற்கான இரண்டாம்பாக திட்டத்தில் செயல்படுத்தலாமா என்று அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. முத்துசாமி கரையாளர் : அமைத்து தருகிறோம் என்று சொல்லியிருப்பதற்கு நன்றி. இதை விரைவில் செய்து கொடுக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மழை காலங்களில் மூன்று மீட்டர் அளவுக்கு தண்ணீர் நிறைந்து போவதால் அங்குள்ள மக்கள் படும் அவதியைப் பார்த்துத்தான் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் இதன் மீது முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் அமல் நடத்தவிருப்பதற்காக நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே இப்போது கோடை காலமாக இருக்கிறது. அடுத்தாற்போல் மழை வந்துவிடும். ஆகவே இந்த வேலையை சீக்கிரமாக எடுத்து முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதுபற்றி ஆராய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.